பக்கங்கள்: 10

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 07 வள்ளுவர் ஆண்டு 2054 ஐப்பசி 08 புதன்கிழமை 25.10.2023 கதிர் 348

# அமைச்சரவை மாற்றம் தீர்வல்ல உடனடித் தேர்தலே நிரந்தர தீர்வு

## ஓமல்பே சோபித தேரர் வலியுறுத்து

அமைச்சரவை மாற்றத்தால் தீர்வு கிட்டாது. தேர்தலை உடன் நடத்துவதன் மூலமே தீர்வு கிட்டும். பொதுமக்களின் கருத்தை அறியும் வகையில் ஜனாதிபதி மற்றும் பொதுத் தேர்தலை உடன் நடத்த வேண்டுமென சிறி லங்கா ராமாஞ்ஞ பீடத்தின் தென்னிலங்கை பிரதம சங்க நாயக்கர் கலாநிதி ஓமல்பே சோபித தேரர் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் அவர் நேற்று நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

தலைவலிக்கு தலையணையை மாற்றுவதால் பிரச்சினை தீர்ந்து விடுவதில்லை. அதுபோன்று நாட்டின் பிரச்சினைகளுக்கு அமைச்சரவையில் மாற்றங்களை ஏற்படுத்துவது தீர்வாக அமையாது.

அதேநேரம், மக்கள் தொடர்பில் கருணையுடன் செயற்பட முடியாத ஒருவரிடத்தில் மிருங்கங்களை பாதுகாக்குமாறு பொறுப்பை ஒப்படைத்தால் மிருகங்களுக்கு பாதுகாப்பினை வழங்க முடியுமா? ஆகவே, அமைச்சரவை மாற்றம் என்பதை ஒரு ஏமாற்று ☞2

## இனிது ரகசியம் அல்ல!

காற்றுள்ளபோதே தூற்றிக்கொள் என்பது பழமொழி. தமிழர்களில் சிலர் அதில் கில்லாடிகள். அந்த வகையில் பொன்னாலையில் கடற்படையினரின் பயன்பாட்டில் உள்ள நிலத்தை அவர்களுக்கே விற்றுவிடுவது என்கிற முடிவுக்கு காணி உரிமையாளர் ஒருவர் வந்துவிட்டார். இனம், போராட்டம் அதுபற்றியெல்லாம் அவருக்குக் கவலையில்லை. எப்படியும் அந்தக் காணியை படையினர் திருப்பித் தரப்போவதில்லை என்பதால் அதை விற்றுக் காசாக்கிவிடுவது சிறந்தது என்று அவர் தீர்மானித்துவிட்டார். இனமும் போராட்டமுமா சோறு போடப்போகிறது, காசுதான் சோறுபோடும் என்று அவர் தீவிரமாக நம்பிவிட்டார் போலும்.

காணி உரிமையாளர் இணக்கம் தெரிவித்ததால் அவரத 80 பேர்ச் நிலம் கடற்படையினரின் பாவனைக்காக சுவீகரிப்புச் செய்யப்படுகின்றது. அதற்கான நில அளவீட்டுப் ☞2

# நவம்பரில் 'நாம் 200'

'நாம் 200' நிகழ்வு ஜனாதிபதி மற்றும் பிரதமர் தலைமையில் நவம்பர் 2 நடைபெறும் என்று நீர் வழங்கல் மற்றும் பெருந்தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி அமைச்சர் ஜீவன் தொண்டமான் தெரிவித்தார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பில் கருத்துத் தெரிவிக்கும்போதே நீர் வழங்கல் மற்றும் பெருந்தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி அமைச்சர் ஜீவன் தொண்டமான் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் ☞2



சம்பள முரண்பாட்டை நீக்குவதற்கு வலியுறுத்தி அதிபர்கள், ஆசிரியர்கள் இணைந்து கொழும்பில் கல்வி அமைச்சின் முன்பாக நேற்று ஆர்ப்பாட்டம் நடத்தினர். அந்தப் போராட்டத்தின் மீது பொலிஸார் நீர்த்தாரைத் தாக்குதலை நடத்தி அவர்களைக் கலைத்தனர். போராட்டக்காரர்களை வெளியேற்ற அதிகளவு பலத்துடன் கண்ணீர்ப் புகைக்குண்டுகளையும் பயன்படுத்தியது பொலிஸ்.

# சம்பள உயர்வாக ரூ. 20,000 வேண்டும் ரயில்வே ஊழியர்கள் நேற்று போராட்டம்

வாழ்க்கைச் செலவு நெருக்கடிகளுக்கு முகங்கொடுக்க முடியாதுள்ளமையின் காரணமாக 20 ஆயிரம் ரூபா சம்பள அதிகரிப்பைக் கோரி ரயில்வே ஊழியர்கள் போராட்டம் நடத்தினார்கள்.

இரத்மலானை சந்தியில் நேற்று முன்னெடுக்கப்பட்ட இந்தப் போராட்டத்தின்போது கருத்து வெளியிட்ட ரயில்வே தொழிற்சங்க ஒன்றியத்தின் இணை ஏற்பாட்டாளர் டி.எம்.டி. அபேரத்ன தெரிவிக்கையில்

அரசாங்கம் பதவியேற்று நான்கு வருடங்களாகின்றது. ஆனால் ரயில்வே ஊழியர்களுக்கான சம்பளம் அதிகரிக்கப் ☞2

# இலங்கை ஆசிரியர் சங்கத்தால் ஆளும் தரப்புக்கு எச்சரிக்கை

## சம்பள உயர்வு இன்றேல் விளைவை எதிர்கொள்வர்

வரவு செலவுத்திட்டத்தில் எமக்கான சம்பள உயர்வு உரியவாறாக மேற்கொள்ளப்படாது விட்டால் விளைவுகளுக்கு முகங்கொடுக்க நேரிடும் என்று ஆட்சியாளர்களுக்கு இலங்கை ஆசிரியர் சங்கத்தின் செயலாளர் ஜோசப் ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

இசுருபாயவுக்கு முன்பாக நேற்றையதினம் முன்னெடுக்கப்பட்ட ஆர்ப்பாட்டத்தின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து வெளியிடும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

கடந்த ஆண்டு, ☞2

# டெங்கு அபாயம் குறித்து எச்சரிக்கை

நிலவும் மழையுடனான வானிலையால் டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரிக்கக்கூடுமென தேசிய டெங்கு ஒழிப்பு பிரிவின் பணிப்பாளர் விசேட வைத்திய நிபுணர் டொக்டர் நளின் ஆரியரத்ன தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

13 சுகாதார வைத்திய அதிகாரிகள் பிரிவினை சேர்ந்த பகுதிகள் டெங்கு அதி அபாய வலயமாக காணப்படுகிறது. வருடத்தின் இதுவரையான காலப்பகுதியில் 67,051 டெங்கு நோயாளர்கள் அடையாளங்காணப்பட்டுள்ளனர். இதனிடையே, இந்த மாதத்தில் மாத்திரம் 2,568 டெங்கு நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர் என்றார்.

# முழுப் பௌத்த மாவட்டமாக திருமலையை மாற்ற முயற்சி

## பணிகள் துரிதம் என்று சுமந்திரன் எம்.பி. குற்றச்சாட்டு

திருகோணமலையை பௌத்த மாவட்டமாக மாற்றுகின்ற நீண்டகால திட்டம் இப்பொழுது துரிதப்படுத்தப்பட்டிருக்கின்றது என்று குற்றஞ்சாட்டுகிறார் தமிழ் அரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன்.

இலங்கை தமிழரசுக் கட்சியின் திருகோணமலை மாவட்ட பணிமனையில் நேற்று இடம்பெற்ற மக்கள் சந்திப்பின் பின்னர் செய்தியாளர்களிடம் அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

திருகோணமலை மாவட்டத்தில் வெவ்வேறு பிர ☞2

# போதைப் பொருகளைத் தடுக்க கட்டளை நிறுவனம் விரைவில்

## சாகல அறிவிப்பு

வெளிநாடுகளிலிருந்து போதைப்பொருள் நாட்டிற்குள் கொண்டுவரப்படுவதை தடுப்பதற்கான போதைப் பொருள் தடுப்பு கட்டளை நிறுவனமொன்று உருவாக்கப்படும் என தேசிய பாதுகாப்பு தொடர்பிலான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகரும் ஜனாதிபதியின் பணிக்குழாம் பிரதானியுமான சாகல ரத்நாயக்க தெரிவித்தார்.

அண்மையில் மீட்கப்பட்ட 4 பில்லியன் ரூபாய் பெறுமதியான 200 கிலோ ஹெரோயின் போதைப்பொருளை கொழும்பு ☞2

# சுகாதாரத்துறையில் தவறு நடந்தது ஏற்றுக்கொண்டார் புதிய அமைச்சர்



சுகாதாரத்துறையில் சிலதவறான விடயங்கள் முன்னெடுக்கப்பட்டன என்று ஏற்றுக்கொண்டார் புதிய சுகாதார அமைச்சர் ரமேஷ் பத்திரண.

சுகாதார அமைச்சில் நேற்றையதினம் கடமைகளைப் பொறுப்பேற்றுக் கொண்டதன் பின்னர் செய்தியாளர்களிடம் பேசியபோது அவர் இதனைத் தெரிவித்தார்.

முன்னைய ஆட்சியாளர்களின் மோசமான நிலைமையால் கடன்முறைமையை நாடவேண்டிய நிலைமை நாட்டுக்கு ஏற்பட்டது. இதற்கிடையில் கடன்களுக்கான கட்டணங்களை செலுத்துவதற்கான தாமதத்தினால் நீண்டகால விநியோகத்தர்கள் அச்செயற்பாட்டிலிருந்து விலகியுள்ளனர். ☞2

## அஸ்வெசும பயனாளிகள்

# வங்கிக் கணக்குகளை ஆரம்பித்து உடனே சலுகைகளை பெறுங்கள்

அஸ்வெசும நலன்புரி கொடுப்பனவு வேலைத் திட்டத்திற்காக தெரிவு செய்யப்பட்டு பிரதேச செயலாளர் அலுவலகத்தில் பெயர்ப்பட்டியலில் உள்வாங்கப்பட்டுள்ள போதும், இதுவரையில் அந்த நன்மைகளை பெற்றுக்கொள்ளாதவர்கள் விரைவில் வங்கிக் கணக்குகளை ஆரம்பித்து தாமதமின்றி அந்த நலன்களை ☞2

## இனி இது .....

பணிகள் நேற்று இடம்பெற்றன. நில அளவைத் திணைக்களத்தினர் அளவீடுகளை மேற்கொண்டனர்.

இந்த நில அளவீட்டின்போது சங்கானைப் பிரதேச செயலக காணி உத்தியோகத்தர், பொன்னாலை கிராம உத்தியோகத்தர், களஅதிகாரியுடன் காணியின் உரிமையாளரும் கடற்படை அதிகாரிகளும் பிரசன்னமாகியிருந்தனர். 80பேர்ச் காணியும் அளவீடு செய்யப்பட்டு எல்லைக் கற்கள் நட்டப்பட்டன.

இவ்வாறு அளவீடு செய்யப்பட்ட நிலத்தின் விபரம் அரச மதிப்பீட்டு திணைக்களத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டு நிலத்தின் மதிப்புக்கு ஏற்ப உரிமையாளருக்குப் பணம் வழங்கப்படும். சுபம்!

...................

முல்லைத்தீவு திருமுருகண்டிப் பிள்ளையார் ஆலய வழக்கு ஒருவழியாகமுடிவுக்குவந்துவிட்டது. முல்லைத்தீவு மாவட்டம் திருமுருகண்டி பிள்ளையார் ஆலய உரித்தாளர்கள் என்று உரிமை கோரி உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு நீதியரசர்களால் தள்ளுபடி செய்யப்பட்டது.

2010ஆம் ஆண்டு உயர் நீதிமன்றத்தில் திருமுருகண்டி பிள்ளையார் ஆலயத்தின் உரித்தாளர்கள் என்று தெரிவித்து அடிப்படை உரிமை மீறல் வழக்கு நீஎீ/ய்யூ/393/2010 என்ற இலக்கத்தில் இந்து சமய கலாச்சார அலுவல்கள் திணைக்களம் மற்றும் அமைச்சுக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்டது.

இந்த வழக்கில் வழிபடுவோர் சபை மற்றும் பக்தர்கள் இடைபுகு கட்சிக்காரர்களாக ஆக்கப்பட்டனர். குறித்தவழக்கின்தீர்ப்புநேற்றுஉயர் நீதிமன்றத்தில்வழங்கப்பட்டபொழுது உயர் நீதிமன்ற நீதியரசர்களான எஸ்.துரைராஜா, ஏ.எல்.ஷிராண் குணரட்ன மற்றும் ஜனக் டி சில்வா ஆகியோர்அடங்கியமூவர்அமர்வின் முன்னிலையில் தீர்ப்புக்காக எடுத்துக்கொள்ளப்பட்டபோது வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டது.

வழிபடுவோர் மற்றும் பக்தர்கள் சார்பில் குறித்த ஆலயம் தனிப்பட்ட ஒருவருடையது அல்ல என முன்வைக்கப்பட்ட வாதத்தை ஏற்றுக்கொண்ட நீதிமன்றம் மனுவைத் தள்ளுபடி செய்தது. இதையடுத்து இனி ஆலயம் துரிதமாக வளர்ச்சியடையும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. இவ்வளவு காலமும் ஆலயத்தில் எந்த வளர்ச்சிப் பணிகளும் செய்ய முடியாத நிலை இருந்தது. வழக்கு நிலுவையில் இருந்ததால் இருந்து வந்தஅந்தநிலைநீக்கப்பட்டுள்ளதை அடுத்து இனிமேல் ஆலயவளர்ச்சிப் பணிகள் துரிதமடையும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

**இடிமின்னல்**
(idiminnal@gmail.com)

## அமைச்சரவை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

செயலாகவே நாங்கள் பார்க்கின்றோம். இந்தச் செயலை நாம் ஏற்றுக்கொள்ளப்போவதில்லை.

ஒட்டுமொத்த அமைச்சரவையையும் மாற்ற வேண்டும். 225 பேரையும் மாற்ற வேண்டும். ஆகவே மக்களிடத்தில் கருத்துக்கணிப்பொன்றை உடன் நடத்த வேண்டும். அதனையே மக்களும்எதிர்பார்த்துகாத்துள்ளனர். மக்களுக்கு அதற்கான சந்தர்ப்பத்தினைவழங்கவேண்டும். அதன் பொருட்டு பொதுத்தேர்தல் மற்றும்ஜனாதிபதித்தேர்தல்ஆகியன அவசியமாகின்றன - என்றார்.

## நவம்பரில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவிக்கையில்,

'நீர்க் கட்டணம் தொடர்பில் பல்வேறு தவறான கருத்துகள் பரப்பப்படுகின்றன. நீர்க் கட்டணம் இதற்கு மேல் அதிகரிக்கப்பட மாட்டாது. கடந்த ஓகஸ்ட் மாதம் நீர்க் கட்டணம்அதிகரிக்கப்பட்டாலும்கூட, குறைந்த வருமானம் பெறுபவர்கள் மற்றும் குறைந்தளவில் நீரைப் பயன்படுத்துபவர்களுக்கும் நீர்க் கட்டணம் அதிகரிக்கப்படவில்லை. மின் கட்டண அதிகரிப்பு உட்பட குடிநீர்சுத்திகரிப்புப்பணிகளுக்கான செலவுகள் அதிகரிப்பும் கடந்த காலங்களில் நீர்க் கட்டண அதிகரிப்பில் தாக்கம் செலுத்தியது. அடுத்த வருடத்தின் ஜனவரி மாதம் முதல் நீர்க்கட்டண சூத்திரம் அறிமுகப்படுத்தப்படும்.' என்று அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

'நாம் 200' என்ற நிகழ்வு எதிர்வரும் நவம்பர் மாதம் 02 ஆம் திகதி ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இந்நிகழ்வில் ஜனாதிபதி மற்றும் பிரதமர் உட்பட பல்வேறு அதிதிகள் கலந்துகொள்ளவுள்ளனர். இந்தியாவில் இருந்தும் அதிதிகள் வருகை தரவுள்ளனர். மலையக மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளை வெளிக் கொண்டு வருவதற்கே இந்த நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

அத்துடன், நாம் மலையக மக்களின்காணிஉரிமைதொடர்பில் அமைச்சரவைப் பத்திரம் ஒன்றை சமர்ப்பித்துள்ளோம். நாளை அமைச்சரவைஉபகுழுகூடவுள்ளது. இது ஜனாதிபதியின் தலைமையில் நடைபெறும். இந்த உப குழுவில் எடுக்கப்படும் முடிவின் பிரகாரம் எதிர்வரும் 30 ஆம் திகதி இது குறித்து ஒரு தெளிவான முடிவு கிடைக்கும். இதற்கு அனைவரும் ஒத்துழைப்பு வழங்கினால் நிச்சயம் கிடைக்கும். இதன் மூலம் காணி உரிமை தொடர்பான பிரச்சினை தீர்க்கப்படும்.

அதேபோன்று, இதுவரை மலையகமக்களின்மேம்பாட்டுக்காக வரவு செலவுத்திட்டத்தில் 3000 மில்லியன்களே ஒதுக்கப்பட்டு வந்துள்ளது. இதில் சுமார் 2000-2500 மில்லியன்கள் வீட்டுத்திட்டங்களுக்காக ஒதுக்கப்படுகின்றது. ஆனால் இந்த வீட்டுத்திட்டங்கள் இலவசமாக மக்களுக்கு கையளிக்கப்படுவதில்லை.

இவ்வாறு அமைச்சின் ஊடாக வழங்கப்படும் வீடுகளுக்கு செலவழிக்கப்பட்ட தொகையில் 50 மூ சதவீதத்தை குறித்த மக்கள் அரசாங்கத்துக்கு திருப்பி வழங்கவேண்டியுள்ளது. ஏற்கனவே வறுமையில் இருக்கும் மக்களால் இவ்வாறு வழங்குவது சாத்தியமற்றதாகவே உள்ளது. எனவே எஞ்சிய சுமார் 500 மில்லியன்களைவைத்துமக்களின் ஏனைய பிரச்சினைகளைத் தீர்க்க முடியாது.

தற்போது நாட்டில் பொருளாதார நெருக்கடிகள் காணப்பட்டாலும் கூட இது ஒரு சமூக ரீதியிலான பிரச்சினையாக இருப்பதால், இந்த முறை வரவுசெலவுத்திட்ட நிதி ஒதுக்கீடு 15,000 மில்லியன்களாக அதிகரிக்கப்பட வேண்டும் என்று கூறியுள்ளோம்.

இதுஐந்துமடங்குஅதிகரிப்பாகும். எனவேஇவ்வாறுகிடைக்கவிருக்கும் நிதியை முறையாக திட்டமிட்டு சரியான வேலைத்திட்டங்களுக்கு பயன்படுத்துவோமாயின் நான் இந்தப் பதவியில் இருந்தாலும் இல்லாவிட்டாலும் ஒவ்வொரு வருடமும் இந்த நிதி இந்த சமூகத்துக்குக் கிடைக்கும் வாய்ப்பு உள்ளது.

மேலும், பல்கலைக்கழகம் தொடர்பிலும் நாம் இந்திய அரசாங் கத்துடன் கலந்துரையாடியுள்ளோம். இந்திய அரசாங்கம் ஏற்கனவே எமக்கு 3000 மில்லியன்களை வழங்கியுள்ளது. இதன் மூலம் நாம் வெறுமனே கண்துடைப்புக்காக செய்யப்படும் மாற்றங்களுக்குப் பதிலாக, நிரந்தர மாற்றங்களைக் கொண்டு வருவதற்கான முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றோம். அதற்காக அமைச்சின் ஊடாக ஒரு செயற்குழு நியமிக்கப்பட்டுள்ளது.

குறிப்பாக இந்த செயற்குழுவில் அரசியல்வாதிகள் எவரும் அங்கம் வகிக்கவில்லை என்பதை குறிப்பிட விரும்புகின்றேன். மலையகத்தை சேர்ந்த புத்திஜீவிகள் உட்பட பேராசிரியர்கள், பல்கலைக்கழக மாணவர்கள் மற்றும் சிவில் சமூகப் பிரதிநிதிகள் உள்ளிட்ட பலர் இப்பணியில் ஈடுபட்டுள்ளனர்.

அவர்களால் வழங்கப்படும் திட்ட வரைவு எமக்கு கிடைத்தவுடன் அதனை இந்திய அரசாங்கத்துக்கு வழங்குவோம். அதேநேரம் மலையகத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும்பாராளுமன்ற உறுப்பினர்கள் அனைவருக்கும் அதனை வழங்கவுள்ளோம். அவர்களின் கருத்துகள் மற்றும் ஆலோசனைகளையும் பெற்று அதனை நடைமுறைத்த திட்டமிட்டுள்ளோம்.

இந்த வேலைத்திட்டத்தின் கீழ் பல்கலைக்கழகம்ஸ்தாபிப்பதற்கான அதிகமான வாய்ப்புகள் உள்ளன. ஏற்கனவே பல்கலைக்கழகம் ஸ்தாபிப்பதற்கானஇடம்அடையாளம் காணப்பட்டுள்ளது.இந்தவிடயம்கல்வி அமைச்சினாலே முன்னெடுக்கப்பட வேண்டியுள்ளதால், நான் கல்வி அமைச்சருடனும் இது குறித்து கலந்துரையாடியுள்ளேன்.அவர்இந்த விடயத்தை முன்னோக்கிக்கொண்டு செல்வதாக தெரிவித்துள்ளார்.

ஏற்கனவேதோட்டத்தொழிலாளர் தொடர்பில் நடைமுறையில் இருந்த கூட்டு ஒப்பந்தம் தொடர்ந்தும் இருக்க வேண்டும் என்பதே எனது கருத்தாகும். அதுமிகமுக்கியமானது. அது ஒரு பொறிமுறை ஆகும்.

அதேபோன்று இந்திய வீட்டுத்திட்டம் ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டுவிட்டது. முன்னர் தோட்டத்தில்தொழில்செய்தால்தான் வீடு என்று இருந்த நிலையை மாற்றி தோட்டத்தில் பிறந்தால் வீடு என்ற விடயத்தைக்கொண்டுவந்துள்ளோம்.

அடுத்தது, கடந்த காலங்களில் வீட்டுத்திட்டங்கள் வரும்போது குறித்த சில எண்ணிக்கையிலான காணிகள்விடுவிக்கப்பட்டன.ஆனால் நாம் இம்முறை ஒரே தடவையில் மொத்தமாக 1785 காணிகளை விடுவிப்பதற்கான அமைச்சரவைப் பத்திரத்தை சமர்ப்பித்துள்ளோம். இதில் முதல் கட்டமாக சுமார் 1300 வீடுகளை நிர்மாணிப்பதற்கான பணிகள் முன்னெடுக்கப்படவுள்ளன.

இதற்காக அமைச்சரவை மூலம் ஒரு குழுவை நியமிக்கவுள்ளோம். அதில் எனது அமைச்சின் செயலாளர் உட்பட மின்சாரம், நீர் வழங்கல், வீதி அபிவிருத்தி போன்ற பல்வேறு அமைச்சுகளின் முக்கியமான அதிகாரிகள்அங்கம்வகிக்கவுள்ளனர். இந்த வீட்டுத்திட்டம் அவர்கள் மூலம் நடைமுறைப்படுத்தப்படும்.

அவ்வாறு செயற்படுத்தப்படும்போது மக்களுக்கு சகல வசதிகளும் ஒரே நேரத்தில் கிடைக்கும். எனவே இவ்விடயம் தொடர்பில் பொறிமுறை ஒன்றை கொண்டுவரவுள்ளோம்.' என்றார்.

## போதைப்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

துறைமுகத்தில்நேற்றுமேற்பார்வை செய்ததன் பின்னரே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:

200 கிலோ கிராம் அளவான பாரிய தொகை ஹெரோயின் போதைப்பொருளை மீட்டுள்ள மைக்கு கடற்படை தளபதி உள்ளிட்ட படையினருக்கும் பொலிஸ் போதைப்பொருள் தடுப்பு பணியகத்தினருக்கும் வாழ்த்துக்களை தெரிவித்தார்.

கடந்த நாட்களில் இவ்வாறான பாரிய தொகையான போதைப் பொருள் இரண்டாவது தடவையாக மீட்கப்பட்டுள்ளது. முதல்தடவையும் பொலிஸ் போதைப்பொருள் தடுப்பு பணியகத்தின்தகவலுக்கமையவே சுற்றிவளைப்புச் செய்யப்பட்டது.

அரச புலனாய்வுப் பிரிவினர் வழங்கிய தகவலுக்கமைய கடற்படையினரால் சுற்றிவளைப்பு மேற்கொள்ளப்பட்டுள்ளது. போதைப்பொருள் வலையமைப்புக்கள் உலக அளவில் வியாபித்துள்ளன.அதிலிருந்துபொதுமக்களை பாதுகாப்பதற்கான பல வேலைத் திட்டங்களும் முன்னெடுக்கப்படுகின்றன.

கடற்படை, பொலிஸ் மற்றும் ஏனைய அரச நிறுவனங்களுடன் இணைந்து இலங்கை போதைப் பொருள் தடுப்புச் செயற்பாடுகளை முன்னெடுத்து வருகின்றது. இவ்வாறான நடவடிக்கையின் மூலம் 65 சதவீத போதைப்பொருள் மாத்திரமே மீட்கப்படுவதோடு, ஏனைய 35 சதவீதமான போதைப்பொருள் நாட்டிற்குள் கொண்டுவரப்படுகின்றது.

தற்போதுள்ள தகவல்களுக்கமைய பெரிய கப்பல்களில் சர்வதேச எல்லைக்குள் போதைப் பொருள் கொண்டுவரப்படும் அதேநேரம், சிறிய படகுகள் ஊடாக நாட்டிற்குள் அனுப்படுவதோடு போதைப்பொருள்வலையமைப்பும் பெருமளவில் வியாபிக்கிறது.

போதைப்பொருள் வியாபாரத்திற்கு இணையாக ஆயுத விற்பனையும் இடம்பெறுகிறது. அது தொடர்பில் அதிக கவனம் செலுத்த வேண்டும். இதனால் தேசிய பாதுகாப்புக்கும் அச்சுறுத்தல் ஏற்படக்கூடும். அதற்கான புதிய சட்டங்களைகொண்டுவரவேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது.

அதற்கானபுதியபோதைப்பொருள் தடுப்பு கட்டளை நிறுவனமொன்று நிறுவப்படும். அதற்கான சட்டம் தயாரிக்கும் பணிகள் இடம்பெற்று வருகின்றன. அதனை விரைவில் பாராளுமன்றத்தில் சமர்பித்து நடைமுறைப்படுத்த எதிர்பார்த்துள்ளோம். என்றும் தெரிவித்தார்.

## வங்கிக் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பெற்றுக் கொள்ளுமாறு நலன்புரி நன்மைகள் சபையின் தலைவர் ஜயந்த விஜேரத்ன தெரிவித்தார்.

உரிய வகையில் வங்கிக் கணக்குகளை திறக்காததன் காரணமாக 156, 261 பயனாளிகளுக்குகொடுப்பனவுகளை வழங்க முடியாத நிலைமை ஏற்பட்டிருப்பதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

நிதி இராஜாங்க அமைச்சர் செஹான் சேமசிங்கவின் தலைமையில் ஜனாதிபதி அலுவலகத்தில் அண்மையில், அஸ்வெசும வேலைத்திட்டம் தொடர்பில் நலன்புரி நன்மைகள் சபைஉள்ளிட்டஉரியதரப்பினருடன் நடைபெற்ற கலந்துரையாடலின் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

முழுமையான வெளிப்படைத் தன்மையுடன் தெரிவு செய்யப்பட்டவர்களுக்கு சமூக நலன்புரி நிவாரணங்களை பெற்றுக்கொடுக்கும் நோக்கில் அஸ்வெசும வேலைத்திட்டத்தின் தற்போதைய நிலைமை தொடர்பில் இதன்போதுவிரிவாகஆராயப்பட்டது.

அஸ்வெசுமபயனாளிகளுக்காக கடந்த ஜூலை மாதத்தில் 05 கட்டங்களின் கீழ் ஒக்டோபர் 16 ஆம் திகதி 1,230,097 குடும்பங்களுக்கு 7,705,302,250.00தொகையிலான நிதிபகிர்ந்தளிக்கப்பட்டுள்ளது. ஜூலை மாதத்திற்கான கொடுப்பனவுகள் டிசம்பர்மாதத்தில்பகிர்ந்தளிக்கப்படும் எனநலன்புரிநன்மைகள்சபையின் தலைவர் ஜயந்த விஜேரத்ன தெரிவித்தார்.

மேன்முறையீடு மற்றும எதிர்ப்புகள் தொடர்பிலான விசாரணைகள் நிறைவுசெய்யப்படாமல் உள்ளதன் காரணமாக பயனாளிகளுக்கு உரிய கொடுப்பனவுகளை வழங்கும் செயற்பாடுகளில் தாமதம் ஏற்பட்டிருப்பதாக இதன்போது தெரியவந்ததோடு, அது தொடர்பிலான பிரச்சினைகளை நிவர்த்தி செய்து பயனாளிகளுக்கு விரைவில் கொடுப்பனவுகளை பெற்றுக்கொடுக்குமாறு இராஜாங்க அமைச்சர் அதிகாரிகளுக்கு அறிவித்தார்.

2இலட்சம் பயனாளிகள் இதுவரையில்வங்கிக்கணக்குகளை ஆரம்பிக்காததன் காரணமாகவே அவர்களுக்கான கொடுப்பனவுகள் வழங்கப்படவில்லை என்றும் வங்கிக்கணக்குகளைஆரம்பிக்கும் பட்சத்தில் அவர்களுக்கான கொடுப்பனவுகளை வழங்குவதில் சிக்கல் இல்லை என்றும் ஜயந்த விஜேரத்ன சுட்டிக்காட்டினார்.

பிரதேசசபையினால்அஸ்வெசும கணனிக் கட்டமைப்பிலிருந்து வழங்கப்படும் கடிதத்தின் மூலம் தமது பிரதேசங்களிலுள்ள மக்கள் வங்கி, தேசிய சேமிப்பு வங்கி மற்றும்பிரதேசஅபிவிருத்திவங்கிக் கிளைகளில்அஸவெசுமபயனாளிகள் தங்களுக்கான கணக்குளை ஆரம்பிக்க முடியும் என்றும், அதன் பின்னர் வங்கியினால் அந்த தகவல்கள் நலன்புரி நன்மைகள் சபைக்கு அறிவிக்கப்படும் என்றும் தெரிவித்தார்.

தேசிய அடையாள அட்டை இல்லாததன் காரணமாக வங்கிக் கணக்குகளை திறக்காதிருப்பவர்களுக்கு 06 மாதங்களுக்குள் தேசிய அடையாள அட்டையை சமர்ப்பிக்க வேண்டும் என்ற நிபந்தையுடன் இலங்கை வங்கி, தேசிய சேமிப்பு வங்கி மற்றும் பிரதேச அபிவிருத்தி வங்கியில்கணக்குகளைதிறப்பதற்கு வாய்ப்பளிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

அஸ்வெசுமவேலைத்திட்டத்தின் செயற்பாடுகள் தொடர்பில் பிரதேச செயலாளர் அலுவலகத்தில் வலுவான பிரிவொன்றை நடத்திச் செல்லவேண்டியதன் அவசியம் மேற்படி சந்திப்பில் வலியுறுத்தப்பட்டதோடு, டிசம்பர் மாதமளவில் கொடுப்பனவுகளை முழுமையாக பூர்த்தி செய்ய எதிர்பார்த்துள்ள நிலையில் விசேட வேலைவாரம்ஒன்றைஅறிவிக்கவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

## இலங்கை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நாம் தொடர்ச்சியாக 120 நாட்களாக போராடினோம். அதன்விளைவாகவே எமக்கு வழங்கப்படவேண்டியசம்பளத்தின் மூன்றிலொரு தொகையை பெற்றுக்கொண்டோம். அதில் மூன்றிலி இரண்டு பங்கு இன்னமும் கிடைக்கவில்லை. அந்தத் தொகையை பெற்றுக்கொள்வதற்காகவே நாம் இப்போது போராட்டத்தினை முன்னெடுத்துள்ளோம்.

அதேநேரம், எதிர்வரும் நவம்பர் 13ஆம் திகதி வரவு, செலவுத்திட்டத்திற்கான யோசனை முன்வைக்கப்படவுள்ளது. அதில் ஆசிரியர்களுக்கான உரிய கொடுப்பனவுகளுக்கான தொகை வழங்கப்பட வேண்டியது அவசியமாகின்றது. அவ்வாறுஉரிய தொகை வழங்கப்படாது விட்டால் அரசாங்கம்பாரியவிளைவுகளுக்கு முகங்கொடுப்பதற்கு நேரிடும் என்பதை தெரிவித்துக் கொள்கின்றோம்.

இதேவேளை, ஆசிரியர்கள் அதிகரிக்கப்பட்டுள்ள வரி மற்றும் இதரகட்டணங்களால்பெரும்நெருக்கடிகளை எதிர்கொள்கின்றார்கள். அந்த விடயத்தினை புரிந்துகொள்ள வேண்டியது மிகவும் அவசியமாகின்றது என்றார்.

## சம்பள உயர்வாக....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

படவில்லை. பொருட்களின் விலைகள் நாளாந்தம் அதிகரித்துச் செல்கின்றது. எரிபொருள் மற்றும் சமையல் எரிவாயுவின் விலைகள் அதிகரித்துள்ளன. கிடைக்கின்ற வருமானத்தில் மக்களால் வாழ முடியவில்லை.

## சுகாதாரத்துறையில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அதேநேரம், சில தவறான விடயங்கள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. அவை தொடர்பில் கொள்கை ரீதியிலான தீர்மானற் களை மேற்கொள்வதற்கு கடமைப்பட்டுள்ளோம் என்றார்.

## முழுப் பௌத்த ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தேசங்களில் இருந்தும் மக்கள் இங்கேவருகைதந்துதங்களுடைய பல பிரச்சினைகளை எமக்கு தெரியப்படுத்தியிருக்கிறார்கள்

இதில் பிரதானமான பிரச்சினையாக நில அபகரிப்பு தொடர்பிலேயே பல குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டன. மூதூர் கங்குவேலி குளத்தை ஆக்கிரமித்து அந்தக் குளத்தை நம்பி விவசாயம் செய்கின்ற தமிழ், முஸ்லிம் மக்களுடைய விவசாய செய்கையை குழப்பும் நோக்கில் குளத்தில் காணப்பட்ட நீரை வெளியேற்றி குளத்துக்குள்ளேயே பெரும்பான்மை இனத்தவர்கள் விவசாயம் செய்கின்றனர்.

இது தொடர்பில் பல முறைப்பாடுகள் எழுத்து மூலமாக கொடுக்கப்பட்டிருந்தும் எதுவித நடவடிக்கை எடுக்கவில்லை. நீர்ப்பாசன அதிகாரிகளிடம் முறையிடுமாறு பொலிஸார் கூறுகின்றனர். அவர்களிடத்தில்முறையிட்டபோதும் எதுவித நடவடிக்கையை எடுக்கப்படவில்லை.

அத்துடன் நீண்ட நாட்களாக திருகோணமலைமாவட்டத்தைஒரு பௌத்த மாவட்டமாக மாற்றுகின்ற நீண்டகாலத்திட்டம்இப்பொழுதுதுரித கதியில்நடைமுறைப்படுத்தப்பட்டுக் கொண்டிருக்கின்றது.

விசேடமாக குச்சவெளி பிரதேச செயலாளர் பிரிவில் 30க்கும் மேற்பட்டபுத்தர்சிலைகளும் வணக்கத் தலங்களும் உருவாக்கப்பட்டு வருகின்றன.

இதில்23இடங்களில்வேலைகள் இடம்பெறுகின்றன. பௌத்த மக்கள் வாழாத இடத்தில்கூட, புத்தர் சிலைகளை வைக்கும் வேலைத் திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

அதேவேளை கிழக்கு ஆளுநர் தடை விதித்தாலும்கூட பாதுகாப்பு பிரிவின் அனுசரணையுடன் விகாரை நிர்மான வேலைகள் இடம்பெற்று வருகின்றன என்று எம்.ஏ.சுமந்திரன்குற்றஞ்சுமத்தினார்.

காலைக்கதிர் Kalaikkathir

# விரும்பியோ அல்லது விரும்பாமலோ தேர்தலை நடத்தியே ஆகவேண்டும்

## முஜிபுர் ரஹ்மான் சுட்டிக்காட்டு




அரசமைப்புக்கு ஏற்ப அடுத்த வருடம் ஜனாதிபதித் தேர்தல் இடம்பெற வேண்டும். அதன் பின்னர் பொதுத் தேர்தல் நடத்தப்பட வேண்டும். ஜனாதிபதி ரணில் விக்கிரம சிங்க விரும்பியோ அல்லது விரும்பாமலோ தேர்தலை நடத்தியே ஆக வேண்டும் என ஐக்கிய மக்கள் சக்தியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும் கட்சியின் பிரதி பொதுச் செயலாளருமான முஜிபுர் ரஹ்மான் தெரிவித்துள்ளார்.

அத்துடன் இடம்பெறவுள்ள எந்தவொரு தேர்தலையும் எதிர்கொள்ள எதிர்க்கட்சி தயார் எனவும் எதிர்காலத்தில் ஐக்கிய தேசிய கட்சியுடன் இணைந்து செயற்படும் தீர்மானங்கள் இல்லை எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு -

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வெள;வேறு காரணங்களை கூறி தேர்தல்களை பிற்போட்டு வருகிறார்.எவ்வாறாயினும் அரசமைப்புக்கேற்ப அடுத்த வருடம் தேர்தல் நடத்தப்பட வேண்டும்.

இந்த விடயம் நாட்டு மக்கள் அனைவரும் நன்கறிந்தது. அதன் பின்னர் நாடாளுமன்றத் தேர்தலும் நடத்தப்பட வேண்டும். எவ்வாறாயினும் உள்ளூராட்சி மன்றத் தேர்தலும் ஏற்கனவே இடம்பெற்றிருக்க வேண்டும்.

இருப்பினும் இது தொடர்பில் தெளிவான அறிவித்தல்கள் விடுக்கப்படவில்லை. 2025 ஆம் ஆண்டு முதல் பகுதியில் நடத்துவதாக ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

இந்தத் தேர்தல் நடத்தப்பட்டிருந்தால் தோல்வியடைய வேண்டி ஏற்படும் என கருதி அவர் தேர்தலை நடத்த போதுமான பணம் இல்லை எனக் கூறியுள்ளார்.எவ்வாறாயினும் ஜனாதிபதி விரும்பியோ அல்லது விரும்பாமலோ நிச்சயம் அடுத்த வருடம் தேர்தல் இடம்பெற சந்தர்ப்பம் அளிக்க வேண்டும்.

மேலும் நாட்டில் எந்தவொரு தேர்தலுக்கும் முகங்கொடுக்க எதிர்க்கட்சி தயாராகவே இருக்கிறது. நாம் ஒருபோதும் தேர்தலுக்கு பின்வாங்கவில்லை.

அதேபோன்று ஐக்கிய தேசியக் கட்சி எந்தவொரு தேர்தலிலும் எமக்கு போட்டி கட்சியாக காணப்படாது. காரணம் கடந்த பொதுத் தேர்தலில் அவர்கள் மக்களால் நிராகரிக்கப்பட்டவர்கள். தற்போது அந்த கட்சியை ஜனாதிபதி மாத்திரமே பிரதிநிதித்துவப்படுத்திக்கொண்டு இருக்கிறார். அந்த வகையில் இந்த கட்சி எமக்கு போட்டியாக இருக்கும் என நாம் நினைக்கவில்லை.

முன்னர் காணப்பட்ட ஐக்கிய தேசிய கட்சி இன்றில்லை. அன்றிருந்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இன்றில்லை. அவர்களின் கொள்கைகள் கோட்பாடுகள் மாற்றமடைந்துள்ளன. அவர்கள் பொதுஜன பெரமுனவுடன் கூட்டணி அமைத்துள்ளனர். ராஜபக்ஷக்களின் தீர்மானங்களையே அந்த கட்சி நடைமுறைப்படுத்திக் கொண்டு செல்கிறது. எதிர்காலத்தில் எதிர்க்கட்சி ஐக்கிய தேசிய கட்சியுடன் இணைந்து பயணிக்க எந்தவொரு அபிப்பிராயங்களும் கிடையாது. பொதுஜன பெரமுனவுடன் கூட்டணி வைத்துள்ளவர்களோடுளங்களுக்குளந்தவொருடீலும் அவசியமில்லை. - என்றார். (05)

## ஹரீன் மற்றும் மனுவின் மனுக்கள் ஒத்தி வைப்பு



அமைச்சர்களான ஹரின் பெர்னாண்டோ மற்றும் மனு நாணயக்கார ஆகியோர் தாக்கல் செய்த மனு மீதான விசாரணையை எதிர்வரும் 27 ஆம் திகதிக்கு உயர் நீதிமன்றம் ஒத்தி வைத்துள்ளது.

விஜித் மலல்கொட, காமினி அமரசேகர மற்றும் அர்ஜுன ஒபேசேகர ஆகிய மூவரடங்கிய உயர்நீதிமன்ற அமர்வு முன்னிலையில் இந்த மனு திங்கட்கிழமை விசாரணைக்கு வந்தது.

கடந்த 12ஆம் திகதி நடைபெற்ற முதற்கட்ட விசாரணையில் நீதிபதிகள் ஆஜராகாததால், சம்பந்தப்பட்ட மனுவின் விசாரணை 27 ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது.

இந்த மனு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோது மனு நாணயக்கார மற்றும் அமைச்சர்களான ஹரீன் பெர்னாண்டோ ஆகியோர் நீதிமன்றில் முன்னிலையாகியிருந்தனர்.

எந்தவொரு நியாயமான விசாரணையும் இன்றி தமது கட்சி உறுப்புரிமையை இரத்து செய்ய ஐக்கிய மக்கள் சக்தி எடுத்த முடிவு சட்டத்திற்கு முற்றிலும் எதிரானது என மனுதாரர்கள் தெரிவித்துள்ளனர்.

பொருளாதார நெருக்கடிக்குத் தீர்வு காண தங்களால் இயன்றதைச் செய்யும் வகையிலேயே ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் கீழ் அரசாங்கத்தில் அமைச்சுப் பதவிகளை ஏற்றுக்கொண்டதாக இருவரும் தெரிவித்திருந்தனர்.

பின்னர் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ ராஜினாமா செய்ததை அடுத்து, அவர்கள் இருவரும் 2022 ஜூலை 9 ஆம் திகதி ஏனைய அமைச்சரவையுடன் தங்கள் அமைச்சுப் பதவிகளை இராஜினாமா செய்தனர்.

எவ்வாறாயினும், அவர்கள் இருவரும் 2022 ஜூலை 22 அன்று புதிய அமைச்சரவை நியமனத்தில் போது தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவால் மீண்டும் அதே அமைச்சுக்கு நியமிக்கப்பட்டனர். (05)

## 33 வருடங்களின் பின் புதுப்பொலிவுபெறும் காங்கேசன்துறை ஞானவைரவர் ஆலயம்

யாழ்ப்பாணம் - காங்கேசன்துறை மேற்கு, மாங்கொல்லை ஞான வைரவர் ஆலய கும்பாபிகேம் வியாழக்கிழமை இடம்பெறவுள்ளது.

அந்தவகையில் புதன்கிழமை மாலை 3 மணியளவில் கணபதி ஹோமத்துடன் பூஜை வழிபாடுகள் இடம்பெறும் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

குறித்த ஆலயம் கடந்த 33 வருட காலமாக இராணுவ உயர் பாதுகாப்பு வலய பகுதிக்குள் இருந்த நிலையில் , கடந்த ஜூன் மாத கால பகுதியில் ஆலய சூழலையும்,அதனைஅண்டியசில பிரதேசங்களில்இருந்தும்இராணுவத்தினர் வெளியேறியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (05)



## சுய தொழில் முயந்சியாளர்களுக்கு கிளி. மாவட்டச் செயலகம் உதவி

சுய தொழில் முயற்சியாளர்களின் உற்பத்திப் பொருள்களை விற்பனை செய்வதற்காக மாவட்ட செயலகத்தில் திங்கள் மற்றும் புதன் கிழமைகளில் வசதி செய்து கொடுக்கப் பட்டுள்ளதாக கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி ரூபாவதி கேதீஸ்வரன் தெரிவித்துள்ளார்.

தமது உற்பத்திகளைச் சந்தைப்படுத்த முடியாமல் தவித்துவந்த உற்பத்தியாளர்களுக்கு, மாவட்ட அரசாங்க அதிபரின் இந்த அறிவிப்பு மகிழ்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

இந்நிலையில் சனி, ஞாயிறு தினங்களிலும் விசேட சந்தை வாய்ப்பை வழங்கி தம்மை மேலும் ஊக்கப்படுத்துமாறு சுயதொழில் முயற்சியாளர்கள் சார்பில் கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (05)




## யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தவர் லெபனான் சிறையில் அடைப்பு

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த நபரொருவர்சட்டவிரோதமாகபிரான்ஸ் செல்ல முற்பட்ட குற்றச்சாட்டில் கைதுசெய்யப்பட்டு லெபனான் சிறையில்தடுத்து வைக்கப்பட்டுள்ளார்.

யாழ்ப்பாணம் கொழும்புத்துறை வசந்தபுரம் பகுதியைச் சேர்ந்த நபர் ஒருவரே இவ்வாறு முகவர் ஒருவரை நம்பி, பிரான்ஸ் செல்வதற்காகப் பெருந்தொகைப் பணத்தைக் கொடுத்துள்ளார்.

இதனையடுத்து அம்முகவர், குறித்த நபரை பல்வேறு நாடுகளுக்கு அழைத்துசென்றுஇறுதியாகலெபனான் நாட்டின் ஊடாக பிரான்ஸ் செல்ல முற்பட்ட நிலையில், அவர் கைது செய்யப்பட்டு லெபனான் சிறையில் தடுத்து வைக்கப்பட்டுள்ளார்.

இந்நிலையில்லெபனான்சிறையில் உள்ள தனது கணவரை மீண்டும் நாட்டுக்கு அழைத்து வர உதவி செய்யுமாறு அவரதுமனைவிபல்வேறு தரப்பினரிடமும் கோரிக்கை விடுத்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (05)

## வெள்ளி, ஞாயிறுகளில் தனியார் வகுப்பு தடை விதித்து சுற்றறிக்கை வெளியீடு

### கிழக்கு மாகாணத்திலும் நடைமுறைக்கு

கிழக்கு மாகாணத்தில் ஞாயிறு மற்றும் வெள்ளிக் கிழமைகளில் தனியார் கல்வி வகுப்புகளை நடத்து-வதைத் தடைசெய்து மாகாண கல்வி அமைச்சு சுற்றறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது.

அறநெறிக் கல்வியில் ஈடுபடுவதற்கு போதிய கால அவகாசம் இல்லாத வகையில் தனியார் கல்வி வகுப்புகள் நடத்தப்படுகின்றமையால் இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாக மாகாண கல்விச் செயலாளர் சட்டத்தரணி எச்.இ.எம்.டபிள்யூ.ஜி.திஸாநாயக்க விடுத்துள்ள சுற்றறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனால், ஞாயிற்றுக்கிழமைகளில் பிற்பகல் 02.00 மணி வரையிலும், மழை பெய்யும் நாள்களில் முழு நாள்களில் தனியார் வகுப்புகள் நடத்த தடை விதிக்கப்பட்டுள்ளது.

இவ்விடயம் தொடர்பில் ஆராய வலயக் கல்விப் பணிப்பாளர்களுக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளதுடன், பொலிஸ் மற்றும் சம்பந்தப்பட்ட உள்ளூராட்சி மன்றங்களின் உதவியை நாடுமாறு சுற்றறிக்கையில் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

கிழக்கு மாகாணத்தில் திருகோணமலை, திருகோணமலை வடக்கு, கந்தளாய், அம்பாறை, மஹாஓயா மற்றும் தெஹியத்தகண்டி ஆகிய பிராந்திய கல்விப் பணிப்பாளர்களுக்கு இந்த அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளன. (05)

## குடிபோதையில் வாகனம் ஓட்டுபவர்களை பிடித்தால் பொலிஸாருக்கு 5 ஆயிரம் ரூபா

குடிபோதையில் வாகனம் ஓட்டுபவர்களை கைது செய்யும் ஒவ்வொரு பொலிஸ் அதிகாரிக்கும் 5,000ரூபாஉதவித்தொகைவழங்கும் முன்னோடி திட்டத்தை செயல்படுத்த போக்குவரத்து கட்டுப்பாடு மற்றும் வீதி பாதுகாப்பு பிரிவு தீர்மானித்துள்ளது.

இந்த திட்டம் 2024 ஆம் ஆண்டு ஜனவரி முதலாம் திகதி முதல் செயற்படுத்தப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த காலகட்டத்தில், குடிபோதையில் வாகனம் ஓட்டும் ஒருவரை கைது செய்யும் பொலிஸ் அதிகாரிக்கு அவரது சம்பளத்தில் ரூ. 5000 கூடுதல் கொடுப்பனவாகவும் மேலும் கைது செய்பவர்களுக்கு அதிகபட்சமாக ஐந்தாயிரம் ரூபா ரொக்கப்பரிசும் வழங்கப்படும் என போக்குவரத்து கட்டுப்பாடு மற்றும் வீதி பாதுகாப்பு அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

அதிகாரிகளை ஊக்குவிக்கவும், விபத்துகளைத் தடுக்கவும் இந்த முன்னோடித்திட்டம்தொடங்கப்பட்டதாக பிரதி பொலிஸ் மா அதிபர் இந்திக்க ஹபுகொட தெரிவித்தார். (05)

காலைக்கதிர் Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## தேர்தல்தான் தீர்வுக்கான வழி

அமைச்சரவை மாற்றத்தால் தீர்வு கிட்டாது. தேர்தலை உடன் நடத்துவதன் மூலமே தீர்வு கிட்டும். பொதுமக்களின் கருத்தை அறியும் வகையில் ஜனாதிபதி மற்றும் பொதுத் தேர்தலை உடன் நடத்த வேண்டுமென சிறி லங்கா ராமாஞ்ஞ பீடத்தின் தென்னிலங்கை பிரதம சங்க நாயக்கர் கலாநிதி ஓமல்பே சோபித தேரர் மிகச் சரியான கருத்தைத் தெரிவித்துள்ளார்.

சுகாதாரத்துறை அமைச்சராக இருந்தவரான கெஹலிய ரம்புக்வெலவை அந்தப் பதவியில் இருந்து தூக்கிவிட்டு அவரது இடத்திற்கு சிறீ லங்கா சுதந்திரக் கட்சியைச் சேர்ந்த ரமேஷ் பத்திரன நியமிக்கப்பட்டதுடன்கெஹலியவுக்குசுற்றாடல்துறை அமைச்சு வழங்கப்பட்டதைக் கண்டித்தே தேரர் இந்தக் கருத்தை முன்வைத்துள்ளார்.

''தலையணையை மாற்றுவதால் தலையிடி தீர்ந்து விடுவதில்லை. அதுபோன்று நாட்டின் பிரச்சினைகளுக்குஅமைச்சரவையில்மாற்றங்களை ஏற்படுத்துவது தீர்வாக அமையாது.

அதேநேரம், மக்கள் தொடர்பில் கருணையுடன் செயற்பட முடியாத ஒருவரிடத்தில் மிருங்கங்களை பாதுகாக்குமாறு பொறுப்பை ஒப்படைத்தால் மிருகங்களுக்கு பாதுகாப்பினை வழங்க முடியுமா? ஆகவே, அமைச்சரவை மாற்றம் என்பதை ஒரு ஏமாற்று செயலாகவே நாங்கள் பார்க்கின்றோம். இந்தச்செயலைநாம்ஏற்றுக்கொள்ளப்போவதில்லை.

ஒட்டுமொத்த அமைச்சரவையையும் மாற்ற வேண்டும். 225 பேரையும் மாற்ற வேண்டும். ஆகவே மக்களிடத்தில் கருத்துக்கணிப்பொன்றை உடன் நடத்த வேண்டும். அதனையே மக்களும் எதிர்பார்த்து காத்துள்ளனர். மக்களுக்கு அதற்கான சந்தர்ப்பத்தினை வழங்க வேண்டும். அதன் பொருட்டு பொதுத்தேர்தல் மற்றும் அரசுத் தலைவர் தேர்தல் ஆகியன அவசியமாகின்றன" –என்று ஆவேசமாகப் பேசியிருக்கிறார் ஓமல்பே தேரர்.

அவர் கூறுபவற்றில் நியாயம் இருக்கின்றது. ஒரு துறையில், அதுவும் பொது மக்களின் உயிர்களோடு தொடர்புபட்ட துறையில் மிக மோசமாகச் செயற்பட்டார் என்று நிரூபிக்கப்பட்ட ஒருவர் அவரது அமைச்சுப் பதவியில் இருந்து மாற்றப்பட்டு இன்னொரு அமைச்சுப் பதவி வழங்கப்படுவது ஏற்புடையதல்ல. அது மக்களை ஏமாற்றும் தந்திரம் மட்டுமே.

பொது ஜன பெரமுன கட்சியின் ஆதரவில்தான் ரணில் விக்கிரமசிங்கவின் ஆட்சி தங்கியிருக்கிறது என்பதால் கெஹலியவை அமைச்சரவையைவிட்டு அகற்ற அரசுத் தலைவர் அச்சப்படுகிறார். அப்படிச் செய்தால் தேவையற்ற பிரச்சினைகளை எதிர்கொள்ள வேண்டியிருக்கும் என்கிற அவரது அச்சமே தவறிழைத்த ஒருவரைத் தொடர்ந்தும் அமைச்சரவையில் வைத்திருக்கும் நிர்ப்பந்தத்தை ஏற்படுத்துகின்றது.

இத்தகைய ஒரு இக்கட்டு நிலையிலிருந்து நாடு மீளவேண்டுமானால்அரசுத்தலைவர்தேர்தல்மற்றும் பொதுத் தேர்தலை நடத்தி, நிலையான ஓர் ஆட்சியை ஏற்படுத்துவது அவசியம். அத்தகைய ஒரு ஆட்சி மாற்றம்ஏற்படாமல்இன்றிருக்கும்பிரச்சினைகளுக்கு ஒரு நிரந்தரத் தீர்வு கிட்டப்போவதில்லை. சங்கீதக் கதிரை போன்று அமைச்சர்களை மாற்றுவது தவிர வேறு எதுவும் நடக்கப்போவதில்லை.

எனவே விரைவில் தேர்தல்களை நடத்துவதே அவசியம். அடுத்த வருடத்தில் அரசுத் தலைவர் தேர்தலும் தொடர்ந்து பொதுத் தேர்தலும் நடக்கும் என்று ஐக்கிய தேசியக் கட்சியின் தெசிய மாநாட்டில் அரசுத் தலைவர் ரணில் விக்கிரமசிங்க அறிவித்திருக்கிறார். ஆனால், தனது வாக்குறுதிகளை எல்லாம் காப்பாற்றும், நிறைவேற்றும் ஒரு சிறந்த தலைவர் அல்லர் அவர். அதனால் இந்தத் தேர்தல்கள் அடுத்த ஆண்டில் நடத்தப்படும் என்கிற உத்தரவாதம் ஏதும் இல்லை. ஆனால், தேர்தல்களை நடத்துவதற்கான அழுத்தத்தை ஆட்சியாளர்களுக்குத் தொடர்ந்து கொடுக்கவேண்டியிருக்கிறது.

# இறுகுகிறது பிடி!

## அத்துமீறும் படகு உரிமையாளர்களும் இனிமேல் இங்கு குற்றவாளிகள்தான்



**ந.லோகதயாளன்**

இலங்கைக்கடல்எல்லைக்குள் அத்துமீறி நுழையும் இந்திய மீனவர்கள் மீதான பிடியை இறுக்குவதற்கு ரணில் - ராஜபக்ஷ ஆட்சி முடிவு செய்துள்ளதாகத் தெரிகின்றது. அதனடிப்படையில் இனிவரும் காலங்களில் எல்லை தாண்டும் படகுகளில் உள்ள மீனவர்கள் மீது மட்டுமல்லாது அந்தப் படகுகளின் உரிமை யாளர்கள்மீதும்இனிமேல்வழக்குத் தாக்கல் செய்யப்படவுள்ளது. அதாவது அந்தப் படகில் அதன் உரிமையாளர் இல்லாவிடினும் கூட அவரே முதலாவது எதிரியாக இணைக்கப்படுவார்.

இந்தியமீனவர்கள்இலங்கைக் கடல் எல்லைக்குள் நுழைந்து மீன்பிடியில் ஈடுபடுவது பெரும் பிரச்சினையாக இருக்கின்றது. எமது கடல் வளத்தைச் சுரண்டுவது மட்டுமல்லாமல், எமது மீனவர்களின் வலைகளையும், தொழில்உபகரணங்களையும்கூட சேதமாக்கிவிடுகிறார்கள். இதனால் அவர்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்படுகின்றது.

இதனால் இத்தகைய அத்துமீறிய மீன்பிடியை உடன் நிறுத்தும்படி எமது மீனவர்கள் தொடர்ந்து வலியுறுத்துவதுடன் போராட்டங்களிலும் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்த நெருக்குவாரங்கள் காரணமாக கடற்படையினர் அவ்வப்போது ஒரு சில இந்தியப் படகுகளைப் பிடிப்பது வழமையாக நிகழ்கின்றன. அத்துமீறும் நூற்றுக்கணக்கான படகுகளில் ஒரு சில படகுகளை மட்டுமே கடற்படையினர் பிடித்து அதிலிருக்கும் மீனவர்களைக் கைது செய்கின்றனர்.

அப்படிக் கைது செய்யப்படும் மீனவர்கள் அந்தந்தப் பகுதி கடற்றொழில் நீரியல் வளத் திணைக்கள அதிகாரிகள் வசம் ஒப்படைக்கப்படுவார்கள். அதிகாரிகள் அவர்கள் மீது நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்வார்கள். இதுவே இதுவரை காலமும்நடைமுறையாகஇருந்து வந்தது. ஆனால், இப்போது அந்த நடைமுறையை மாற்றிப் படகு உரிமையாளர்களையே முதன்மைக் குற்றவாளியாக்கும் நடவடிக்கைதொடங்கப்பட்டுள்ளது.

2018ஆம் ஆண்டு சட்டத்தின் அடிப்படையில், கைது செய்யப்படும்போது படகு உரிமையாளர் படகில் இருக்காத போதும் அவர் மீது குற்றஞ்சுமத்துவதற்கு இடமிருப்பதால் இனிவரும் காலங்களில் அவ்வாறே படகு உரிமையாளர்களை முதலாவது குற்றவாளிகளாகப் பெயரிட்டு வழக்குத் தாக்கல் செய்யும்படி மாவட்ட கடற்றொழில் திணைக்கள அதிகாரிகளுக்கு திணைக்களப் பணிப்பாளர் நாயத்தினால் அறிவுறுத்தப்பட்டிருக்கின்றது.

இதன்படி, ஒக்டோபர் 15 பிடிக்கப்பட்ட 5 இந்திய படகுகளில் பயணித்த 27 மீனவர்கள் மீதான வழக்குகளில் இம்முறை முதலாம் எதிரிகளாக படகு உரிமையாளர்கள் இணைக்கப்பட்டுள்ளனர்.

இலங்கை கடற்பரப்பிற்குள் எல்லை தாண்டும் இந்திய மீனவர்கள் கைது செய்யப்பட்டால் படகுகளில்இருந்தமீனவர்களுடன் முதலாம்எதிரியாகபடகின்உரிமையாளர் படகில் இல்லாதுவிடினும் அவரேமுதலாம்எதிரியாககுறிப்பிடுமாறு மாவட்ட நீரியல்வளத் திணைக்களங்களிற்கு கடற்றொழில்நீரியல்வளத்திணைக்கள பணிப்பாளர் நாயக த்தினால் அறிவுறுத்தல்வழங்கப்பட்டுள்ளது.

இதற்கமையவே கடந்த 15ஆம திகதி கைது செய்யப்பட்ட 5 படகில் இருந்த அனைவர் மீதும் பி. அறிக்கை மன்னார் மற்றும் ஊர்காவற்றுறை நீதிமன்றங்களில் சமர்ப்பிக்கும்போது படகின்



உரிமையாளர்களின் பெயர் முதலாம் எதிரியாக இணைக்கப்பட்டுள்ளது.

இந்த புதிய நடைமுறை 2018ஆம் ஆண்டின் புதிய சட்ட திருத்த ஏற்பாட்டிற்கு அமையவே கடைப்பிடிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இலங்கையின் 2018ஆம் ஆண்டின் கடற்றொழில் சட்டத்தில் படகின் உரிமையாளரும் குற்ற வாளி என எழுதப்பட்டிருந்தாலும் உரிமையாளர்இன்றிப்பயணிக்கும்படகின் உரிமையாளரை குற்றவாளியாக்கும் நோக்கோடு வேண்டுமானால் படகினை அரச உடமை ஆக்கும் நோக்கத்திற்கு அல்லது அதற்கான நியாயத்திற்காக இணைக்கப்பட்டிருக்கலாம்.

மாறாக வேண்டுமென்றே படகில் இல்லாத ஒருவரை குற்றவாளிப்பட்டியலில் இணைக்குமாறு வழங்கியுள்ள அறிவுறுத்தலின்பிரகாரம்உரிமையாளரையும் அழைத்து வழக்கு முடியும் வரை சிறை வைப்பதோ அல்லது உரிமையாளர் இலங்கை சென்றுநீதமன்றில்முன்னிலையாகும் வரையில் மீனவர்களை சாத்தியமானது.

படகில் பயணிக்கும் மீனவன் வாழ்வாதாரம் கருதி கடலிற்கு வரும் நிலையில் படகின் உரிமையாளரும் படகுடன் வரவேண்டும் என்று எதிர்பார்ப்பது மிக மோசம். அவனிடம் கடவுச் சீட்டு இல்லாதுவிடின் கடவுச் சீட்டை எடுப்பதற்கே 15 நாள் போதாது அதனைவிட இந்திய நாணயத்தில் 50 ஆயிரம் ரூபா போதாது. என இராமேஸ்வரம் விசைப்படகு சங்கத் தலைவர் பெ.சேசுராயா தெரிவிக்கின்றார்.

இதன் காரணமாக இன்று தன்னாரில் இடம்பெறும் வழக்கும் நாளை ஊர்காவற்றுறை நீதிமன்றில்இடம்பெறவுள்ளவழக்குகள் தொடர்பில் இந்திய மீனவர்களிடம் நீண்ட எதிர்பார்ப்பு உள்ளதாகவும் சேசுராயா குறிப்பிட்டார்.

இதேநேரம் இதுவரை வழக்கினை தாக்கல் செய்யும் நீரியல்வளத் திணைக்கள அதிகாரிகளே நீதிமன்ற வழக்குகளில் தோன்றி வாதங்களை முன் வைத்தனர். இனிவரும்நாட்களில் அரச சட்டத்தரணிகளே இந்த வழக்குகளை கையாள்வர் எனவும்கடற்றொழில்திணைக்கள மாவட்ட அதிகாரிகளிற்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இதுதொடர்பில்ஊர்காவற்றுறை கடற்றொழிலாளர் சமாச செயலாளர் அ.அன்னராசா கருத்து தெரிவிக்கையில்,

2018 ஆம் ஆண்டின் வெளிநாட்டு படகுகள் ஒழுங்குபடுத்தல் திருத்தச் சட்டத்தை முழுமையாக அமுல்படுத்த வேண்டுத் என்பதே எமதும் கோரிக்கை ஆனால் தற்போது இலங்கை மீனவர் விடயத்தை இங்கு அரசியல் கட்சி ஒன்று அரசியலாக்குகின்றது.

எனவே தமிழக மீனவர் விடயத்தில் சட்டம் நடைமு-றைப்படுத்த வேண்டும் மீனவர்கள் மனிதாபிமானத்துடன் நடாத்தப்படவேண்டும். அதனால் 7 நாளோ அல்லது 14 நாள்களிலோ விடுவிக்கும் வகையில் அமையலாம் என்றார்.

காலைக்கதிர் Kalaikkathir

# முறைகேடாக வாகனங்கள் இறக்குமதி; பல கோடி ரூபா வரி வருவாய் இழப்பு

மின்சார வாகனங்களை இறக்குமதி செய்வதற்கான 119 அனுமதிப்பத்திரங்களை முறைகேடாக பயன்படுத்தி வாகனங்கள் இறக்குமதி செய்யப்பட்டுள்ளமைதெரியவந்துள்ளது.

இவற்றில் 75 வாகனங்கள் ஒருநிறுவனத்தால் இலங்கைக்கு கடத்தப்பட்டதாக நாடாளுமன்ற வழிவகைகள் பற்றிய குழு அறிவித்துள்ளது.

முறைகேடான முறையில் வாகனங்கள் இறக்குமதி செய்யப்பட்டதன் மூலம் பல கோடி ரூபா வரி வருவாய் இழப்பு ஏற்பட்டுள்ளதாகவும் இதன் மூலம் கடத்தல்காரர்கள் பெருமளவு பணம்சம்பாதித்துள்ளனர் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

எலக்ட்ரிக்கார்களை இறக்குமதி செய்ய உரிமம் வழங்குவதை உடனடியாக நிறுத்தவும், கடத்தல்காரர்களால் ஏமாற்றப்பட்ட வரிப் பணத்தைவசூலிக்கவும்நாடாளுமன்றத்தின் வழிவகைகள் குழு சம்பந்தப்பட்ட துறைகளுக்கு அறிவுறுத்தியுள்ளது. (05)


# போர்க்கால ஊடகவியலாளர்களுக்கு முல்லைத்தீவில் கௌரவம் அளிப்பு

முல்லைத்தீவுஊடகஅமையத்தின் இரண்டாம்ஆண்டுநிறைவுவிழாவும், போர்காலத்தில்பணியாற்றியஊடகவியலாளர்களைகௌரவிக்கும்நிகழ்வும் ஞாயிற்றுக்கிழமை முல்லைத்தீவு ஊடக அமையத்தில் இடம்பெற்றது.

ஊடக அமையத் தலைவர் சண்முகம்தவசீலனின்தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் வவுனியா ஊடக அமையத்தின் தலைவர் ப.கார்த்தீபன், போர்க்கால ஊடகவியலாளர்கள் எனப் பலரும் கலந்துகொண்டிருந்தனர்.

இந்நிகழ்வின்போது முல்லைத்தீவு மாவட்டத்தைச் சேர்ந்த போர்க்கால ஊடகவியலாளர்கள் 15 பேர் கௌரவிக்கப்பட்டதோடு அவர்களுக்கு நினைவுச்சின்னங்களும், நினைவுப் பரிசிலும்வழங்கிவைக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (05)

# அழகுக்கலை நிபுணர் பிரேமசிறி காலமானார்



இலங்கையின் மூத்த அழகுக்கலை நிபுணரான பிரேமசிறி ஹேவாவசம் திடீர் சுகவீனம் காரணமான தனது 64 ஆவது வயதில் திங் கட்கிழமை காலமானார். இலங்கையில் அழகுக் கலைத் துறையில் முக்கிய பங்கு வகித்த பிரேமசிறி நாட்டிற்காக பல சர்வதேச விருதுகளையும் வென்றுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (05)

# ரூ.23 கோடி மதிப்புள்ள கொக்கெய்ன் போதைப்பொருள்கள் புத்தகங்களில்

08 சிறுவர் கதைப் புத்தகங்களின் அட்டையில் இருபத்து மூன்று கோடி ரூபா பெறுமதியான கொக்கெய்ன் போதைப்பொருளை இலங்கைக்குக் கொண்டு வந்த இந்தோனேசியப் பெண்ணொருவர் நேற்று (22ஆம் திகதி) சுங்க போதைப்பொருள் கட்டுப்பாட்டுப் பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

அவர் அந்நாட்டில் ஜவுளி வர்த்தகத்தில் ஈடுபட்டு வரும் 42 வயதுடைய பெண் என முதற்கட்ட சுங்க விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளது. அவர் முதலில் எத்தியோப்பியாவின் அடிஸ் அபாபாவிலிருந்து இந்த போதைப்பொருள் சரக்குகளுடன் தனது பயணத்தைத் தொடங்கி கட்டாரின் டோஹாவுக்கு வந்து, அங்கிருந்து கட்டார் ஏர்வேஸ் விமானம் மூலம் இந்த நாட்டிற்கு வந்தார். 04 கிலோ 598 கிராம் எடையுடைய தடிமனான ஆங்கில சிறுவர் கதைப் புத்தகங்களின் அட்டைகளை கவனமாக வெட்டித் தயார் செய்து தனது சாமான்களில் மறைத்து வைத்திருந்தாள்.

இந்த வருடத்தில் கட்டுநாயக்க விமானநிலையத்தில்சுங்கபோதைப்பொருள் கட்டுப்பாட்டு பிரிவின் அதிகாரிகள் மேற்கொண்ட ஐந்தாவது கொக்கெய்ன் போதைப் பொருள் சோதனை இதுவென சிரேஷ்ட சுங்க அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (05)



# ஏழு நாடுகளில் இருந்து வருபவர்களுக்கு விசா இல்லாத நுழைவுக்கு அங்கீகாரம்

## அமைச்சரவை வழங்கியது

ஏழு நாடுகளைச் சேர்ந்த சுற்றுலாப் பயணிகளுக்கு விசா இன்றி பிரவேசிப்பதற்கான முன்மொழிவுக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது. இந்தியா, சீனா, ரஷ்யா, ஜப்பான், மலேசியா, இந்தோனேஷியா மற்றும் தாய்லாந்து ஆகிய நாடுகளைச் சேர்ந்தவர்கள் விசா இல்லாத அனுகலை பெற்றுக்கொள்ள முடியும்.

இந்த திட்டம் உடன் அமுலுக்கு வருவதாகவும் 2024 மார்ச் 31 ஆம் திகதி வரை தொடரும் என்றும் சுற்றுலாத்துறை அமைச்சர் ஹரின் பெர்னாண்டோ தெரிவித்தார்.(05)

# யாழ்., வவுனியாவை சேர்ந்த இருவர் கறுப்புப் பட்டியலில் இருந்து நீக்கம்

பயங்கரவாத நடவடிக்கைகளுக்கு உதவியமைக்காக கறுப்பு பட்டியலில் சேர்க்கப்பட்ட இருவரை அதிலிருந்து நீக்க பாதுகாப்பு அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது.

பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கமல் குணரத்னவால் இது குறித்த வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது.

வவுனியாவைச் சேர்ந்த அந்தோனி எமில் லக்ஷ்மி காந்தன் மற்றும் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த முருகேசு ஸ்ரீ சண்முகராஜா ஆகிய இருவரும் தடை பட்டியலில் இருந்து நீக்கப்பட்டுள்ளனர்.

பயங்கரவாத நடவடிக்கைகளை ஆதரித்ததற்காக இருவரும் கடந்த 2014 ஆம் ஆண்டு முதல் தடுப்பு பட்டியலில் சேர்க்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (05)



குறிஞ்சி மலை நகர் Kurinchi Hill City

கொழும்பு - மட்டக்களப்பு A4 வீதியில் 190 ஆவது km இல் 800 m தூரத்தில்

பதுளை மாவட்டம் ஹல்துமுல்லை பிரதேச செயலர் பிரிவு

15 பேர்ச் முதல் 40 பேர்ச் வரையான காணித்துண்டுகள் விற்பனைக்கு!

சுற்றுலா விடுதி, விடுமுறை வீடு ஆகியவற்றுடன் தேயிலை, கோப்பி, கறுவா பயிர்ச்செய்கையும்



அருகில் உள்ள சுற்றுலா மையங்கள்

(100கிமீ சுற்றுவட்டாரத்தில்)

பம்பரகந்த, தியலும, துன்கிந்த, இராவணா, ரம்பொடை உட்பட 10இற்கும் மேற்பட்ட நீர்வீழ்ச்சிகள்

தேசிய சரணாலயங்கள் மற்றும் பூங்காக்கள்

Horton Plains National Park, Hakgala Botanical Gardens
Victoria Park, Kande Ela Educational Forest Park
Lunugamvehera National Park, Yala National Park
Udawalawe National Park

கதிர்காமம் முருகன் கோவில், சீதா அம்மன் ஆலயம், ரம்பொடை ஆஞ்சனேயர் கோவில்



தனியான வாகன தரிப்பிட வசதி

முழுமையான 24 மணிநேர பாதுகாப்பு சேவை

தொடர்ச்சியான பராமரிப்பு ஏற்பாடு

மின்சார இணைப்பு ஏற்பாடு - குடிதண்ணீர் வசதி

உணவகம் - உள்ளக விளையாட்டுத்திடல்

தேயிலை, கோப்பி, கறுவா தொழிற்சாலைகள்

சுற்றுலா ஏற்பாடுகள்

பேர்ச் 200,000/-

பரப்பு 20 இலட்சம்

5th Project

இது ஒரு கற்பகவனம் செயற்திட்டம்

Good Gift Property Developers (Pvt) Ltd



தொடர்புகளுக்கு: 0777 43 5557


கிளிநொச்சியில்
ஐஸ்வர்யம்
பெருவிருந்து மண்டபம்
Ishwaryam Banquet Hall
Tel:- 021 228 3701, 071 7354308
Whatsapp:- 071 7736 4308
No.315, Kandy Road,
Kilinochchi
அன்பான வரவேற்பு
தமிழர் பாரம்பரிய உணவு வகைகள்
இந்தியன் இனிப்புப் பண்டங்கள்
இந்தியன் உணவுவகைகள்
Online booking இற்கு விசேட விலைக்கழிவாக 30% பெற்றுக்கொள்ளலாம்.
சகலவிதமான நிகழ்வுகளும் புதிதாக வடிவமைக்கப்பட்ட அனைத்து வசதிகளுடனும் அழகான விருந்துபசார மண்டபம்
ISHWARYAM BANQUET HALL
BANQUET MEALS HALL
FULL OPTION
MAIN DIHES
Vegitable Fried Rice with Panner & Ghee - 300/=
Chikne Fried Rice with Vegetable - 1150/=
Kothu Rotty With Vegitable in Indian Style
DESSERT
Ice Cream Cup - 60/=
Fruit Salad - 60/=
I ce Cream & Fruit Salad - 100/=
Cream Caramel - 120/=
SPECIAL MENU PACKAGE
BEVERAGES
JUICE 200 ml - 70/=
Milk Drink - 70/=
Cocacola M - 70/=
Pepsi M - 70/=
Coca Cola Tin - 250/=

காலைக்கதிர் Kalaikkathir

# போதைப்பொருள் பாவனையை கட்டுப்படுத்த அதிரடி தீர்மானம்

## சாகல ரத்நாயக்க தெரிவிப்பு

வெளிநாடுகளிலிருந்து போதைப்பொருள்கள் நாட்டிற்குள் கொண்டுவரப்படுவதைத் தடுப்பதற்காக 'போதைப்பொருள்தடுப்புகட்டளை நிறுவனமொன்று' ஸ்தாபிக்கப்படுமென தேசிய பாதுகாப்பு தொடர்பிலான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகர் சாகல ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில் –

கடற்படை,பொலிஸ்மற்றும்ஏனைய அரச நிறுவனங்களுடன் இணைந்து இலங்கை போதைப்பொருள் தடுப்புச் செயற்பாடுகளை முன்னெடுத்து வருகின்றன.

இவ்வாறான நடவடிக்கையின் மூலம் 65 சதவீத போதைப்பொருள் மாத்திரமே மீட்கப்படுவதோடு, ஏனைய 35 சதவீதமான போதைப்பொருள் நாட்டிற்குள் கொண்டுவரப்படுகின்றது.

தற்போதுள்ளதகவல்களுக்கமைய பெரிய கப்பல்களில் சர்வதேச எல்லைக்குள் போதைப்பொருள் கொண்டுவரப்படும் அதேநேரம், சிறிய படகுகள் ஊடாக நாட்டிற்குள் அனுப்பப்படுவதோடுபோதைப்பொருள் வலையமைப்பும் பெருமளவில் வியாபிக்கிறது.

போதைப்பொருள்வியாபாரத்திற்கு இணையாக ஆயுத விற்பனையும் இடம்பெறுகிறது. அது தொடர்பில் அதிக கவனம் செலுத்த வேண்டும்.

இதனால் தேசிய பாதுகாப்புக்கும் அச்சுறுத்தல்ஏற்படக்கூடும். அதற்கான புதிய சட்டங்களை கொண்டுவர வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது. அதற்கான புதிய போதைப்பொருள் தடுப்பு கட்டளை நிறுவனமொன்று நிறுவப்படும்.

அதற்கான சட்டம் தயாரிக்கும் பணிகள் இடம்பெற்று வருகின்றன. அதனைவிரைவில்நாடாளுமன்றத்தில் சமர்பித்து நடைமுறைப்படுத்த எதிர் பார்த்துள்ளோம். – இவ்வாறு சாகல ரத்நாயக்க தெரிவித்துள்ளார். (05)

# சுகாதாரத்துறையை மீட்டெடுக்க ஜனாதிபதிக்கு பொறுப்புள்ளதாம்

## அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் கூறுகிறது




சாதாரண மக்களுக்கு சுகாதார துறையில் ஏற்பட்டுள்ள பிரச்சினைகள் தொடர்பில் தெளிவுப்படுத்தவேண்டும். சுகாதார துறையை மீட்டெடுக்க ஜனாதிபதிக்கு முக்கிய பொறுப்புள்ளது. கட்டாயமாக ஜனாதிபதியின் தலையீடு இதற்கு அவசியமாகும் என அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் செயலாளர் வைத்தியர் ஹரித்த அலுத்கே தெரிவித்தார்.

சுகாதாரதுறையில்ஏற்பட்டுள்ள பிரச்சினைகளை தெளிவுபடுத்தும் வகையில் அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தால் கொழும்பில் துண்டு பிரசுரங்கள் விநியோகிக்கப்பட்டன. இதன்போது கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் மேலும் குறிப்பிட்டவை வருமாறு –

வரலாற்றில்ஊழல்யுகமொன்று சுகாதார துறையில் ஏற்பட்டுள்ள நிலையில் உடல்முழுவதும்புற்றுநோய் பரவி வாய் மூலமாக மருந்து செலுத்தி, ஊசிகளை செலுத்தி குணப்படுத்த முடியாத நிலை போன்று இன்று நாம் வீதியில் இறங்கியுள்ளோம். சாதாரண மக்களுக்கு தெளிவுப்படுத்தும் வகையில் துண்டுபிரசுரங்களை விநியோகிக்கின்றோம். சுகாதாரத் துறையை மீட்டெடுக்க ஜனாதிபதிக்கு முக்கிய பொறுப்புள்ளது. கட்டாயமாக ஜனாதிபதியின் தலையிடு இதற்கு அவசியமாகும். – என்றார்.

இதேவேளை போக்குவரத்து கொடுப்பனவுகளை அதிகரித்தல் உள்ளிட்ட சில கோரிக்கைகளை முன்வைத்து சுகாதாரப் பரிசோதகர்கள் நாடளாவிய ரீதியில் திங்கட்கிழமை பணிப்பகிஷ்கரிப்பில் ஈடுபட்டு இருந்தனர்.

நாடளாவிய ரீதியில் 2400 அதிகாரிகள் இந்த தொழிற்சங்க நடவடிக்கைகளில்ஈடுபட்டுள்ளனர் என இலங்கை சுகாதார பரிசோதகர்கள் சங்கத்தின் செயலாளர் எஸ்.போபிட்டிய தெரிவித்துள்ளார். தாம் எதிர் நோக்கும்பிரச்சினைகள்தொடர்பில் கலந்துரையாடல்களை மேற் கொண்ட போதிலும் உரிய தீர்வு கிடைக்கவில்லை என அவர் மேலும் குறிப்பிட்டார். (05)

# தபாலில் பறிமாறப்படும் போதைப் பொருள்கள்?

கொழும்பு மத்திய தபால் பரிவர்த்தனை நிலையத்திற்கு பொதைப்பொருள் பொதியை எடுத்து செல்வதற்காக வந்த இருவரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

இதன்போது பொலிஸார் வானத்தை நோக்கி துப்பாக்கிசூடு நடத்தியதையடுத்து பதற்றமான சூழல் ஏற்பட்டது.

கொழும்பு டி.ஆர். விஜேவர்தன மாவத்தை மத்திய தபால் பரிவர்த்தனை நிலையத்திற்கு பொதி ஒன்றை எடுத்துச்செல்வதற்காக சொகுசு காரில் இருவர் வருகை தந்துள்ளனர்.

இதன்போது அங்கு ஓட்டோவில் வருகை தந்த பொலிஸ் போதைப்பொருள் ஒழிப்புப் பிரிவின் அதிகாரிகள் அவர்களைகைதுசெய்வதற்கு நடவடிக்கை எடுத்துள்ளனர்.

இதன்போது போதைப் பொருள் ஒழிப்புப் பிரிவினர் வானில் துப்பாக்கிச் சூடு நடத்தியுள்ளனர்.

காரில் பயணித்த சந்தேக நபர்கள் இருவரையும் கைது செய்யச் சென்ற வேளையில் வானத்தை நோக்கிச் துப்பாக்கிச்சூடுநடத்தப்பட்டதாக பொலிஸ் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இதற்கமைவாக போதைப் பொருள் கடத்தலில் ஈடுபட்ட இரண்டுசந்தேகநபர்கள்கைது செய்யப்பட்டுள்ளனர். (05)







JRIDE
BEYOND THE ROAD
ஜே ரைட்
ஒன்லைன் ரக்சி அப்
ONLINE TAXI APP FROM JAFFNA
ஆட்டோ கட்டணங்களால் ஆடிப்போயுள்ளீர்களா? கவலையினை விடுங்கள்.
நாங்கள் தயாராகிவிட்டோம்!
யாழ்ப்பாணத்தில் இருந்து உங்களுக்காக உருவாக்கப்பட்ட ரக்சி அப் (Taxi App)
உங்கள் பயணங்களை பாதுகாப்பானதாகவும் மகிழ்ச்சிகரமானதாகவும் செலவு குறைவாகவும் அமைத்துக்கொள்ளுங்கள்.
இப்போதே Play Store இல் இருந்து JRide - Beyond The Road App இனை இறக்கி உங்கள் தொலைபேசி இலக்கத்தை பயன்படுத்தி உங்கள் கணக்கை பதிவு செய்யலாம்!
YOU CAN EASILY REGISTER & BOOK YOUR RIDE
+94 21 222 8358
JRIDE TAXI SERVICE
SPEED IT NET
பரமேஸ்வரா சந்தி,
134, பலாலி வீதி
திருநெல்வேலி, யாழ்ப்பாணம்
+94 703 563213
www.jride.lk

காலைக்கதிர்
Kalaikkathir

# காஸா மக்கள் முகங்கொடுத்துவரும் துயரங்கள் தொடர்பில் மதத் தலைவர்களிடம் பலஸ்தீன தூதர் கண்ணீர் மல்க விவரிப்பு



பலஸ்தீன மக்களுடனான தமது ஆதரவை வெளிப்படுத்தி கொழும்பிலுள்ள பலஸ்தீன தூதரகத்தில் ஒன்றுகூடிய பல் மதத்தலைவர்கள் மற்றும் சிவில் சமூக செயற்பாட்டாளர்களுக்கு நன்றி தெரிவித்த பலஸ்தீன தூதுவர் கலாநிதி சுஹைர் ஹம்தல்லா செயிட், காஸா மக்கள் முகங்கொடுத்துவரும் துயரங்கள் குறித்து அவர்களிடம் கண்ணீர்மல்க எடுத்துரைத்தார்.

ஹமாஸ் அமைப்பால் கடந்த 7 ஆம் திகதி தென் இஸ்ரேலில் நடத்தப்பட்ட தாக்குதலை அடுத்து தீவிரமடைந்துள்ள இஸ்ரேல் - ஹமாஸ் மோதலின் நீட்சியாக கடந்தசிலவாரங்களாககாஸாவில் இஸ்ரேலிய படையினர் நடத்தி வரும்தாக்குதல்களால்சிறுவர்கள் உட்பட பெருமளவானோர் உயிரிழந்துள்ளனர்.

இருப்பினும் அமெரிக்கா, பிரிட்டன், பிரான்ஸ், ஜேர்மனி போன்ற மேற்குலக நாடுகள் இஸ்ரேலுக்கு ஆதரவளித்து-வரும் நிலையில், அந்நாடுகளில் பெருந்திரளான மக்கள் ஒன்றுகூடி அந்த அரசாங்கங்களுக்கு எதிராகவும், பலஸ்தீனமக்களுக்கு ஆதரவாகவும் போராட்டங்களில் ஈடுபட்டுவருகின்றனர்.

அந்தவகையில் கடந்த சில தினங்களாக பலஸ்தீன மக்களுடனான ஒருமைப் பாட்டையும், அவர்களுக் கான ஆதரவையும் வெளிப் படுத்தி இலங்கையிலும் கவனவீர்ப்புப்போராட்டங்கள் ஏற்பாடு செய்யப்பட்டிருந்ததுடன் அரசியல் தலைவர்கள் பலரும் இலங்கைக்கான பலஸ்தீன தூதுவரைசந்தித்துதமது ஆதரவை வெளிப்படுத்தியிருந்தனர்.

இவ்வாறானதொரு பின் னணியில் திங்கட்கிழமை சகல மதங்களையும் பிரதிநிதித்து-வப்படுத்தும்மதத்தலைவர்களும், ஊடகவியலாளர்கள், மனித உரிமைகள் மற்றும் சிவில் சமூக செயற்பாட்டாளர்களும் இலங்கைக்கான பலஸ்தீன தூதுவர் கலாநிதி சுஹைர் ஹம்தல்லா செயிட்டை கூட்டாகச் சந்தித்து, பலஸ்தீனமக்களுக்கான தமது ஆதரவை வெளிப்படு;த்தி யிருந்தனர்.

பலஸ்தீன தூதுவருடன் திங்கள் பி.ப 2.00 மணியளவில் நடைபெற்ற இச்சந்திப்பில் இலங்கை அங்கிலிக்கன் திருச்சபையின் கொழும்பு ஆயர் ரொட்ரிகோ இத்தமல்கொட, மிலாகிரிய சென் போல்ஸ் ஆலய அருட்தந்தைஆன்ட்ரூ,மருதானை சி.எஸ்.ஆர் நடுநிலையத்தின் நிறைவேற்றுப்பணிப்பாளர் அருட்தந்தை ரொஹான் மற் றும் அருட்சகோதரி ரசிகா உள்ளிட்ட கிறிஸ்தவ மதகுரு மார்களும், மௌலவி பிருதௌஸ் உள்ளிட்ட இஸ்லாமிய மற் றும் பௌத்த மதகுருமாரும், லக்ஷ்மன் குணசேகர, ஹனா இப்ராஹிம், ஷ்ரீன் ஸரூர், சுவஸ்திகா அருலிங்கம், மரிஸா டிசில்வா உள்ளிட்ட சிவில் சமூக செயற்பாட்டாளர்களும் பங்கேற்றிருந்தனர்.

இச்சந்திப்பின்போது பலஸ்தீன தூதுவர் சுஹைர் ஹம்தல்லா செயிட் மிகுந்த உணர்ச்சிப்பெருக்குடன் கண்ணீர்மல்க காஸாவின் தற்போதைய நிலைவரம் குறித்து விவரித்தார். இஸ்ரேலுக்கு உதவுவதற்கு முன்வந்த பலஸ்தீனம் தற்போது முற்றாக அழிக்கப்பட்டுவருவதாகவும், பெண்கள் மற்றும் சிறுவர்கள் உள்ளிட்ட பலஸ்தீன மக்கள் உணவு, நீர், மின்சாரம் உள்ளிட்ட அத்தியாவசியத்தேவைகளைப் பூர்த்திசெய்துகொள்ளமுடியாத நிலையில்இருக்கின்றனர்எனவும் சுட்டிக்காட்டினார்.

அதேபோன்று தற்போது இலங்கை தொழிலாளர்களை இஸ்ரேலுக்குஅனுப்பிவைப்பதற்கு அரசாங்கம் உத்தேசித்து-வரும் நிலையில், அதனைச் செய்யவேண்டாம் என்று கேட்டுக்கொண்ட தூதுவர், மிகமோசமான யுத்தம் நடை பெற்றுக்கொண்டிருக்கும் தற்போதைய சூழ்நிலையில் இலங்கைப்பிரஜைகளின்உயிரை அச்சுறுத்தலில் தள்ளவேண்டாம் என்று கேட்டுக்கொண்டார்.

மேலும் தற்போது மேற்குலக நாடுகள்செயற்படும்விதம்குறித்து விளக்கமளித்த அவர், மிகவும் தனித்துவம் வாய்ந்த பலஸ்தீன சமூகத்தின்கலாசாரம், பாரம்பரியம் உள்ளிட்ட அனைத்தும் இப்போது அழிக்கப்பட்டுவருவதாகவும், இது 'இனப்படுகொலை' எனவும் சுட்டிக்காட்டினார்.

அவற்றை செவிமடுத்த மதத்தலைவர்கள், இஸ்ரேலின் செயற்பாட்டைக் கண்டித்ததுடன் மூன்று தசாப்தகால சிவில் யுத்தத்துக்கு முகங்கொடுத்த நாடு என்றரீதியில்அதன்தாக்கங்களை தாம் நன்கறிந்திருப்பதாகவும் குறிப்பிட்டனர். (05)

# செப்ரெம்பரில் பணவீக்கம் 0.8 சதவீதமாக வீழ்ச்சி

தேசிய நுகர்வோர் விலைச்சுட்டெணுக்கு அமைவாக மதிப்பிடப்படும் நாடளாவிய ரீதியிலான பணவீக்கம் கடந்த ஓகஸ்ட் மாதம் 2.1 சதவீதமாகப் பதிவாகியிருந்த நிலையில், அது செப்ரெம்பர் மாதம் 0.8 சதவீதமாக வீழ்ச்சியடைந்துள்ளது. அதன்படி கடந்த ஓகஸ்ட் மாதம் 5.4 சதவீதமாகப் பதிவா-யிருந்த உணவுப்பொருள்களின் விலைகள் செப்ரெம்பர் மாதத்தில் 5.2 சதவீதமாக வீழ்ச்சியடைந்துள்ளன.

அதேவேளை ஓகஸ்டில் 9 சதவீதமாகப் பதிவாகியிருந்த உணவல்லாப்பொருள்களின் விலைகள் மற்றும் கட்டணங்கள் செப்ரெம்பரில் 5.9 சதவீதமாகப் பதிவாகின.

பொருளாதார நெருக்கடியின் விளைவாக கடந்த காலங்களில் இதற்கு முன்னர் ஒருபோதுமில்லாத அளவுக்கு மிகவும் உயர்வான பணவீக்கத்தை இலங்கை பதிவுசெய்திருந்த போதிலும், கடந்த ஜுன் மாதம் முதல் பணவீக்கம் படிப்படியாக வீழ்ச்சியடைந்து வந்தது. இது ரூபாவின் பெறுமதி ஸ்திரமடைவதற்குப் பெரிதும் பங்களிப்புச்செய்தது.

பொருளாதார நெருக்கடியைச் சீரமைப்பதை முன்னிறுத்தி இலங்கை மத்திய வங்கியால் நடைமுறைப்படுத்தப்பட்ட இறுக்கமான நாணயக்கொள்கை மற்றும் சர்வதேச நாணய நிதியத்துடன் எட்டப்பட்ட இணக்கப்பாட்டுக்கு அமைவாக அரசாங்கத்தால் மேற்கொள்ளப்பட்ட கொள்கை மறுசீரமைப்புக்கள் என்பவற்றின் மூலம்இவ்வாண்டுஇறுதிக்குள்பணவீக்கத்தை ஒற்றை இலக்கப்பெறுமதிக்குக் கொண்டுவர எதிர்பார்த்திருப்பதாக மத்திய வங்கி ஆளுநர் கலாநிதி நந்தலால் வீரசிங்க ஏற்கனவே குறிப்பிட்டிருந்த பின்னணியிலேயே, இத்தகைய தொடர்ச்சியான வீழ்ச்சி பதிவாகிவருகின்றமை குறிப்பிடத்தக்கது.(05)

# 60 வயதுக்கு மேற்பட்ட ஊழியர்களுக்கு ஓய்வு அளிக்கும் உத்தரவு இரத்தாம்

## தாதிய சேவைக்கு விசேட சலுகை

60 வயதுக்கு மேற்பட்ட இலங்கையின் தாதியர் சேவையின் நான்கு தரங்களில் உள்ள ஊழியர்களுக்குஓய்வுஅளிக்கும்உத்தரவை மேன்முறையீட்டு நீதிமன்றம் இரத்து செய்துள்ளது.

அதன்படி, ஏற்கனவே ஓய்வுபெற்று அனுப்பப்பட்ட 60 வயதுக்கு மேற்பட்ட அனைவரையும் மீண்டும் பணியில் சேருமாறும் உத்தரவு பிறப்பித்துள்ளது. (05)

# திருட்டுப் போனது 64 ஆயிரம் ரூபா: முட்டை மீது சத்தியம் வாங்கிய அதிபர்

பொகவந்தலாவைபகுதியில்உள்ள தோட்டபாடசாலையொன்றில்நவராத்திரி விழாவுக்காக மாணவர்களிடம் திரட்டப்பட்ட 64 ஆயிரம் ரூபா பணம் திருடப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் பொலிஸில் முறைப்பாடுசெய்யுமாறு ஆசிரியர்கள் சிலர்கூறியபோதும்அதிபர்முறைப்பாடு செய்யாமல் இருப்பதாக பாடசாலை வட்டார தகவல்கள் தெரிவித்துள்ளன.

நவராத்திரி விழாவுக்காக மாணவர் ஒருவரிடம் இருந்து 150 ரூபா பெறப்பட்டு மொத்தமாக 64 ஆயிரம் ரூபா சேர்ந்துள்ளது.

எனினும்இருநாள்களுக்குபின்னர் பணம் களவுபோய்விட்டதாக அதிபர் கூறினார் என ஆசிரியர்கள் சிலர் தகவல் வெளியிட்டுள்ளனர்.

இது தொடர்பில் பொலிஸில் முறைப்பாடுசெய்யுமாறு ஆசிரியர்கள், மாணவர் தரப்பில் கோரிக்கை விடுக்கப்பட்டபோதிலும் பாடசாலை அதிபர் பூசாரி ஒருவரிடம் சென்று முட்டை ஒன்றை மந்திரித்து மாணவர்களிடமும் ஆசிரியர்களிடமும் சத்தியம் பெற்றுள்ளார் எனவும் தெரியவருகின்றது. (05)

# மனைவியைக் கொன்றுவிட்டு கணவன் தூக்கிட்டு தற்கொலை

நபர்ஒருவர்தனதுமனைவியைக் கொன்றுவிட்டு தானும் தூக்கிட்டு தற்கொலை செய்துகொண்டுள்ள சம்பவம் பூகொட மண்டாவல பிரதேசத்தில் இடம்பெற்றுள்ளது.

குறித்த நபர் குடும்பத் தகராறு காரணமாக தனது மனைவியைக் கூரிய ஆயுதத்தால் தாக்கிக் கொலைசெய்துள்ளார் எனவும், அதன் பின்னர் அவரது வீட்டிற்கு அருகேயுள்ளமரமொன்றில்தூக்கிட்டுத் தற்கொலை செய்துள்ளார் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

இந்நிலையில் இது குறித்த மேலதிக விசாரணைகளைப் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (05)

# பொலிஸார் மீது தாக்குதல் பெண் உட்பட மூவர் கைது

ரம்புக்கனை திஸ்மல்பொல பிரதேசத்தில்பொலிஸ்அதிகாரிகளின் கடமைக்கு இடையூறு விளைவித்த பெண் உட்பட மூவர் கைது செய்-யப்பட்டுள்ளனர்.

நாரம்பெத்த பொலிஸ் விசேட அதிரடிப்படை யின் அதிகாரிகள் இருவர் ஹெரோயின் போதைப் பொருளை வைத்திருந்த ஒருவரைக் கைது செய்யச் சென்ற போது, சந்தேக நபர்கள் குறித்த அதிகாரிகளை தாக்கியுள்ளனர்.

தாக்குதலில் காயமடைந்த அதிகாரிகள் இருவரும் ரம்புக்கனை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட பின்னர் மேலதிக சிகிச்சைக்காக கேகாலை வைத்தியசாலையில் சேர்க்கப் பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

தாக்குதலில் ஈடுபட் டதாக சந்தேகிக்கப்படும்பெண் ஒருவரையும் மேலும் இருவரையும் ரம்புக்கனை பொலிஸார் கைது செய்துள்ளனர். (05)

# லெபனான் சிறையில் இலங்கைப் பெண்



போலி முகவரொருவர் ஊடாக பிரான்ஸ் நாட்டுக்குச் செல்ல முயன்ற யாழ்ப்பாணத்தை சேர்ந்த வயது முதிர்ந்த பெண்ணொருவர் லெபனான் சிறையில் அடைக்கப்பட்டுள்ளார்.

வேலணைப் பகுதியைச் சேர்ந்த 64 வயதான பெண்ணொருவரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளார்.

இந்நிலையில் தமது தாயாரை உடனடியாக மீட்டுத்தருமாறு அவரது பிள்ளைகள் கோரிக்கை விடுத்து வருகின்றனர்.

இதுகுறித்துஅவர்கள் ஊடகங்களில் தெரிவித்துள்ளவை வருமாறு -

எமது தாயார் பிரான்ஸில் வசிக்கும் தனது சகோதரர்களின் குடும்பத்துடன்வசிப்பதற்காகவிசாவிற்கு விண்ணப்பித்திருந்தார். எனினும் விசா கிடைக்காத காரணத்தால் முகவர் ஊடாகச் செல்ல முயன்றார்.

அதற்காக முகவர் ஒருவருக்கு 20 லட்சம் ரூபா பணம் முதல் கட்டமாக வழங்கியிருந்தார். இதனை அடுத்து கடந்த ஜுன் மாதம் இலங்கையில் இருந்து புறப்பட்ட நிலையில் , மத்திய கிழக்கு நாடுகள் சிலவற்றுக்குச் சென்று, பின்னர் லெபனான் சென்று பிரான்ஸ் செல்ல முற்பட்ட வேளையில் லெபனான் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு, சிறையில் தடுத்து வைக்கப்பட்டுள்ளார். -எனத்தெரிவித்துள்ளனர். (05)

# 20 கோடி ஜென்னை வழங்கும் ஜப்பான்

இலங்கையின் மீன்பிடித் தொழிலின்அபிவிருத்திக்காகஜப்பானிய அரசாங்கம் தமது பொருளாதார மற்றும் சமூக அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் 200 மில்லியன் ஜென்னை வழங்குவதற்கு இணங்கியுள்ளது.

சுமார் 435 மில்லியன் ரூபா மானியம், இலங்கை மீன்பிடி துறைமுக கூட்டுத்தாபனத்திற்கு இயந்திரங்கள், உபகரணங்கள் கொள்வனவிற்கு என வழங்கப்படும் எனக் கூறப்பட்டுள்ளது. (05)




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 25.10.2023இல் வெளியிடப்பெற்றது.